1982 செப்டம்பர் 10]

5. அறிவிப்புகள்.

(அ) தமிழ் அறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்குதல் பல்வேறு விதித் துறைகள் சட்டமுன்வடிவு 1982

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு தமிழ் அறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல்–பல்வேறு விதித்துறைகள் சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தம் இசைவை தெரிவித்துள்ளார்.

6 அரசினர் சட்டமுன்வடிவுகள்.

(அ) தமிழ் அறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் பல்வேறு விதித்துறைகள் சட்டமுன்வடிவு 1982.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு தமிழ் அறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் பல்வேறு விதித்துறைகள் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச்சட்டமுன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) குஅடகுக் கடைக்காரர்கள் (திருத்த) சட்ட முன்வடிவு 1982.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் தலைவரவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் (திருத்த சட்டமுன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன் மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே; இந்த பில் இன்ட்ரொடக்ஷன் ஸ்டேஜிலே நான் இதை அப்போஸ் செய்கிறேன். இதன் ஒரிஜினல் பில் 1943 லே இன்ட்ரொடியூஸ் செய்யப்பட்டபோது அன்றைக்கு இருந்த ஆங்கிலேய அரசாங்கம் அடகுக்காரர்களுக்கு சாதகம செய்யும் போது அந்தச் சட்டத்திலே மனிதாபிமான அடிப்படையிலே 'கான்சலேஷன்' என்ற ஒரு சரத்தை வைத்தார்கள். அதாவது அடகுக்கடைக்காரர்கள் தவறு செய்தால் அவர்களுடைய லைசென்ஸை கான்சல் செய்ய வேண்டுமென்ற ஒரு கடுமையான பனிஷ்மென்டை வைத்திருந்தார்கள். அதோடு இம்பிரிசன்மென்டு

பைன் ஆர் போத் என்றும் இருந்தது. அப்போது கான்சலேஷன் என்று வைத்திருந்ததை ஒரு திருத்தம் என்ற முறையில் இப்போது நீங்கள் 'சஸ்பென்ட் என்று கொண்டு வந்திருக்கிறீர்கள். Interupt on I request you Sir as the brain bank of the Ruling party

அப்போது இருந்த அடகுக்கடைக்காரர்கள் சம்பந்தப்பட்ட சட்டத்திலே இருக்கிற ஓட்டைகளை அடைக்கிறோம் என்று சொல்லி கான்சலேஷனுக்குப் பதிலாக சஸ்பென்ஷன் என்று கொண்டு வந்திருக்கிறீர்கள். அந்தச் சட்டத்தில் எவ்வளவோ ஓட்டைகள் இருக்கின்றன. அதை எல்லாம் விட்டுவிட்டு இன்றைக்கு இந்த ஒன்றைமட்டும் திருத்தப்போகிறோம் என்று சொல்லி, திருத்தச் சட்டம் கொண்டுவந்திருக்கிறீர்கள்.

12 சதவீதம் வட்டி என்று சொல்லியிருக்கிறீர்கள். இன்றைக்கு இருக்கின்ற நிலவரத்தில் ரூபாய்க்கு ஒரு பைசா வட்டி வீதத்தில் யார் கடன் கொடுப்பார். அடகு வைப்பவர்கள் தங்கத்தை வைக்கிறார்கள், புடவையை வைக்கிறார்கள், டேக்சாவை வைக்கிறார்கள். அவைகளுக்கு எல்லாம் கடன் கொடுக்கிறார்கள். இந்தமாதிரியான அவல நிலை இன்றைக்கு இந்த நாட்டிலே இருக்கிறது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் 5000 அடகுக் கடைக்காரர்கள் இருந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் அவர்களின் எண்ணிக்கை 15,000 ஆக உயர்ந்தது. இப்போது உங்களுடைய ஆட்சியில் 24,000 அடகுக்கடைக்காரர்கள் இருக்கிறார்கள். கேரளத்தை எடுத்துக்கொண்டால் அங்கே அடகுக்கடைக்காரர்களே கிடையாது. அதைப்போல இங்கேயும் மொத்தமாக ஒழிக்கப்பட வேண்டும். இலட்சக்கணக்கான ஏழை எளிய மக்களை காப்பாற்ற வேண்டுமென்று சொன்னால் இந்தச் சட்டத்தில் இருக்கிற எல்லா ஓட்டை உடைசல்களும் அடைக்கப்பட்டாக வேண்டும். அதற்கு வேண்டிய முறையில் பல திருத்தங்களைக் கொண்டுவந்து ஒரு புதிய சட்டத்தை நிறைவேற்ற வேண்டும். இந்த ஒரு திருத்தம் மட்டும் போதாது. ஆகவே இதை ஒரு செலக்ட் கமிட்டிக்கு ரெபர் செய்ய வேண்டும். செலக்ட் கமிட்டிக்கு விட்டு, தேவையான திருத்தங்களை எல்லாம் கொண்டுவந்து, இதை ஒரு காம்பிரிஹென்சிவ் லெஜிஸ்லெஷனாகக் கொண்டுவர வேண்டும்.

இப்போது அவசரம் அவசரமாக இந்த ஒரு திருத்தத்தை மட்டும் கொண்டுவந்து நிறைவேற்றுவது சரியல்ல. மேலும் இது தேர்தல் நேரம். இந்த நேரத்தில் இந்தச் சட்டத்தை நீங்கள் கொண்டுவந்து நிறைவேற்றுவதாக இருந்தால் ஏற்கெனவே பல குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகி இருக்கிற உங்கள்மீது மீண்டும் எதிர்க்கட்சியினர் குற்றச்சாட்டுக்கு நீங்கள் ஆளாகாதீர்கள். ஆகவே, இந்தச் சட்டத்தை நீங்கள் வாபஸ் வாங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தச் சட்டத் திருத்தத்தினுடைய நோக்கத்தைத் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். சஸ்பென்ஷன் என்ற ஒரு ப்ரொவினைக் கொண்டுவந்திருப்பதால் கான்சலேஷன் ரத்தாகிவிட்டது என்று அர்த்தமல்ல. கான்சலேஷன் அப்படியே இருக்கிறது. அதோடு சேர்த்து சஸ்பென்ஷனையும் கொண்டு வருகிறோம். ஆகவே சஸ்பென்ஷன் வருவதால் கான்சலேஷன் போய்விடுகிறது என்று தவறாக கருத வேண்டாம். நான் ஏற்கெனவே நேற்றைக்கு முன்தினம் இந்த அவையில் சொல்லும்போதே 1943 ஆம் ஆண்டு 'பான்புரேக்கர் ஆக்டுக்கு வேண்டிய சட்டத் திருத்தங்களைக் கொண்டு வருவோம் என்று சொல்லியிருக்கிறேன். அவையிலே அதுபற்றி தெளிவாகச் சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி ''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) எதிர்பாராச் செலவுநிதி (மூன்றாவது திருத்த) சட்டமுன்வடிவு 1982

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1982) ஆய்வு செய்யப்பெற்று பரிந்துரைகள் ஏதுமின்றி திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.